வாக்குகள் உள்ள வார்டுகள்கூட இருக்கின்றன. அதிலே தேர்வு செய்வதற்குச் சங்கடமான சூழ்நிலை நாமினேஷன் போடுகிற காலத்திலே ஏற்படுவதையொட்டித்தான் அதைப் பரிசீலிக்கிறோம். கூடுமான வரையில் அதுதான் தேவை என்று எல்லோரும் ஏகோபித்து ஒத்துக் கொள்கிற சூழ்நிலை வருமானால், அதைப்பற்றி நிச்சயமாகப் பரிசீலிக்கலாம்.

அணுகு சாலைகள் அமைக்க நிலம் கையகப்படுத்துதல்.

*3197—திரு. ஆர். சாமிநாதன் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்குவிடையளிப்பாரா ;

(அ) மதுரை, சமயநல்லூர் இருப்புப் பாதைக் கடவின் மீது மேம்பாலம் கட்டும் பணி நிறைவு பெற்றும் அணுகு சாலைகள் அமைக்க நிலம் கையகப்படுத்தப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நிலம் எப்போது கையகப்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நிலம் கையகப்படுத்த வேண்டிய பணி முன்னேற்றத்தில் உள்ளது.

திரு. ஆர். சாமிநாதன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை சமீபத்தில் உள்ள இருப்புப் பாதை கடவின் மீது மேம்பாலம் கட்டி ஏறத்தாழ 2, 3 ஆண்டுகள் ஆகிவிட்டன. எனவே அதற்கு அருகிலுள்ள, 7வது தேசிய நெடுஞ்சாலையில் ரெயில்வே லெவல் கிராசிங்கிலே புகைவண்டி வரும்போதெல்லாம் அடிக்கடி கதவுகள் மூடப்படுகின்றன. எனவே போக்குவரத்துக்கு இடையூறுகளும் கால தாமதமும் ஏற்படுவதால் விரைவில் நிலங்களைக் கையகப்படுத்தி அணுகுசாலை அமைப்பதற்கு அரசு முன் வருமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

9–25 மணி

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அணுகுசாலையை அமைப்பதிலே நிலம் எடுப்பதிலேதான் சற்று காலதாமதம் ஆகிவிட்டது. 1984–ல் இருந்து நிலம் எடுப்பதிலே தகராறுகள் ஏற்பட்டு நின்றுவிட்டது. இருந்தாலும் அரசு 17–7–1989 அன்று நிலம் எடுக்க ஆணை பிறப்பித்திருக்கிறது. அதையொட்டி டெண்டர் கோரப்பட்டது. இப்போது டெண்டர் மத்திய அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அந்தப் பரிசீலனைகள் முடிந்தவுடன் வேலைகள் ஆரம்பிக்கப்படும்.

திரு. ஆர். சாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அணுகு சாலையை அமைக்க மத்திய அரசு ஏற்கனவே ஒதுக்கியுள்ள மதிப்பீட்டுத் தொகையைச் செலவிடுவதிலே இன்னும் காலதாமதம் ஆனால் மாநில அரசே அந்தத் தொகையை ஏற்க வேண்டிய நிலைமை ஏற்படும். எனவே, மத்திய அரசு விரைவில் அந்த டெண்டர் மூலம் அதை விரைவில் எடுக்கச் சொல்லி, நிலத்தைக் கையகப்படுத்தி, அணுகு சாலையை அமைக்க விரைவல் அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்தை உடனே எடுப்பதில் அரசுக்கு ஒன்றும் தயக்கம் இல்லை. ஆனால் நீதிமன்றம் என்ற ஒன்று இடையிலே இருக்கிறது. அவர்கள் எதற்கும் ஸ்டே கொடுத்து விடுகிறார்கள். மறுபடியும் ஸ்டேயை வெக்கேட் பண்ண வேண்டும். அதற்குள் சிறிது கால தாமதம் ஆகிவிடுகிறது. ஆகவே, இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. இருந்தாலும் அந்த நிலைமை ஏற்படாது. ஏற்பட்டாலும் அரசு அதை பார்த்துக் கொள்ளும்.

மதுரை-கொச்சி தேசிய நெடுஞ்சாலை.

*5961—திரு. நா. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை-கொச்சி தேசிய நெடுஞ்சாலைப் பாதையை கம்பம்-கம்பம்மெட்டு வழியாக அமைக்க மத்திய அரசுக்குப் பரிந்துரைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தொண்டி-மதுரை-தேனி-கம்பம்- கோட்டம்-கொச்சி சாலையை தேசிய நெடுஞ்சாலையாக உயர்த்துமாறு 26–12–1989 அன்று மைய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மைய அரசின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. நா. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் அந்தச் சாலை வழியாக வரும்போது, அந்தச்சாலையின் நிலைமையை நன்றாகப் பார்த்து உணர்ந்துள்ளார்கள். அதுமட்டுமல்லாமல்,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS